# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C. C. No. 334/2025** |
| Prosecution witness | : | P.W. 3 |
| List of witness | : | L.W. 3 |
| Name | : | ரஷ்யா |
| Father's /Husband Name | : | கலையரசன் |
| Village | : | மூலமங்களம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 45 |
| Occupation | : | விவசயாம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 26th day of May 2026. A1 present. A2 died.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசயாம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1ம் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் ஆவார். 2ம் எதிரி இறந்துவிட்டார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நான் வீட்டிலிருந்தேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. அக்கம்பக்கத்தினர் என்னிடம் சம்பவம் நடந்த பிறகு தெரிவித்தார்கள். நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்று காயம்பட்டிருந்த எனது கணவர் அ.சா.1 ஐயும் அ.சா.2 ஐயும் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. போலீசார் விசாரணையிலும் மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன்.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1ம் மற்றும் 1ம் எதிரியும் தற்போது சமாதானம் செய்துகொண்டார்கள் என்றால் சரிதான்.

கடந்த 30.09.2020 மாலை சுமார் 05.00 மணியளவில் எனது உறவினரின் துக்க நிகழ்ச்சியில் நானும் எனது கணவர் அ.சா.1ம் கலந்துகொண்டு அ.சா.2ன் வீட்டுக்கு வந்த போது அ.சா.2க்கும் பக்கத்து வீட்டில் வசிக்கும் 1ம் எதிரிக்கும் வாய்தகராறு நடந்துகொண்டிருந்தது என்றும் எனது கணவர் அ.சா.1 ஏன் சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டார் என்றும் அப்போது இறந்துபோன 2ம் எதிரி கீழே கிடந்த செங்கல்லை எடுத்து அ.சா.1 ஐ அசிங்கமான வார்த்கைளால் திட்டிகொண்டே அடித்தார் என்றும், அதில் அவருக்கு தலையில் பின்பக்கம் காயம் ஏற்பட்டது என்றும், 1ம் எதிரி கையால் அவரை அடித்தார் என்றும், இதை தடுக்க வந்த அ.சா.2 ஐ 1ம் எதிரி கீழே தள்ளிவிட்டார் என்றும் அதில் அவருக்கு நெஞ்சில் உள்காயம் ஏற்பட்டது என்றும் தெருவில் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் விலக்கிவிட வந்தபோது 1ம் எதிரி அவர்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார் என்றும் காயம்பட்ட அவர்களை நான் எனது இருசக்கர வாகனம் மூலம் குடவாசல் அரசு மருத்துவமனைக்கு முதலுதவி செய்ய அழைத்துசென்றேன் என்றும், அங்கிருந்து திருவாருர் அரசு மருத்தவக்கல்லூரி மருத்துமனையில் சேர்த்தேன் என்றும் போலீசார் வாக்குமூலத்திலும் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் 1ம் எதிரியுடன் சமாதானம் செய்துக் கொண்டதால் ஆஜர் 1ம் எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை

**மறுவிசாரணை** இல்லை

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 21:28:25 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.